# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்: பொதுமக்கள் கலந்துகொள்ள முதல்வர் அழைப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

துறைகளை ஒருங்கிணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி / கல்லூரி வளாகங்களில் இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

**பரிசோதனை விவரங்களை மக்கள் அறிந்து கொள்ளலாம்!**

இம்முகாம்களில் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்துப் பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரகச் செயல்பாட்டு பரிசோதனைகள் (யூரியா, கிரயாட்டினின்) செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே பயனாளிகளின் பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக உடனடியாக தெரிவிக்கப்படும்.

அனைத்துப் பயனாளிகளுக்கும் கண், காது, மூக்கு (ம) தொண்டை மற்றும் பல் மருத்துவச் சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின்படி எக்ஸ்ரே (XRay), எக்கோகார்டியோகிராம் (Echocardiogram), அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (USG) மற்றும் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் (ம) மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட உள்ளன.

**முகாம்களில் வழங்கப்படும் மருத்துவ சேவைகள்!**

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்குக் கீழ்க்கண்ட மருத்துச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு வழங்கப்பட உள்ளன.

- பொது மருத்துவம்,
- பொது அறுவை சிகிச்சை மருத்துவம்,
- இருதய மருத்துவம்,
- எலும்பியல் மருத்துவம்,
- நரம்பியல் மருத்துவம்,
- தோல் மருத்துவம்,
- காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம்,
- மகப்பேறு மருத்துவம்,
- இயன்முறை மருத்துவம்,
- பல் மருத்துவம்,
- கண் மருத்துவம்,
- மனநல மருத்துவம்
- குழந்தைகள் நல மருத்துவம்
- நுரையீரல் மருத்துவம்
- நீரிழிவு நோய் மருத்துவம்
- கதிரியக்கவியல் மருத்துவம்

மேற்சொன்ன பரிசோதனைகள் மற்றும் மருத்துவச் சேவைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரச் சான்றிதழ் இம்முகாமிலேயே வழங்கப்பட உள்ளன.

இம்முகாம்களின் விரிவான தரவுத் தொகுப்பு, தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர் சிகிச்சை நடவடிக்கைகள், நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) வாயிலாகக் கண்காணிக்கப்பட உள்ளன.

**பொது மக்களுக்கு உயர்தர மருத்துவச் சேவை வழங்கப்படும்!**

இரத்த அழுத்தம், சிறுநீரக செயல்பாடு, பெண்களுக்கான கருப்பை வாய்ப் புற்று (ம) மார்பக புற்றுநோய் ஆகியவற்றை கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவச் சேவைகள் நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) மூலம் கண்காணிக்கப்படும் இம்முழு உடல்பரிசோதனை முகாமானது பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. இதன் மூலமாக உயர்தரமான மருத்துவச் சேவைகள் பொதுமக்களுக்கு அவர்கள் வாழுமிடங்களுக்கு அருகிலேயே கிடைக்க இருக்கின்றன.

இந்த முகாமை அனைத்து பொதுமக்களும், குறிப்பாக “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் நடத்தப்படும் முதற்கட்ட பரிசோதனையின் அடிப்படையில் மருத்துவ நிபுணர்களின் விரிவான பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் இந்த முகாமில் அவசியம் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

மிகவும் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ் பெற்றிருக்கும் மாணவர்களின் கல்விப் பயணம்:

# நலம் பெற்றுப் பங்கேற்ற எனது முதல் நிகழ்ச்சி மன மகிழ்ச்சியைத் தந்தது!

## உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற – ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலப்பள்ளி மாணவ – மாணவியரை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, ஆக.1-**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிய பின், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில், “மிகவும் பின்தங்கிய - துன்பங்களை அனுபவித்த குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ் பெற்றிருக்கும் அவர்களது கல்விப் பயணத்தையும் - கல்வி மீதான அவர்களது பற்றையும் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினேன்!” என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**




முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

நலம்பெற்றுப் பங்கேற்ற முதல் நிகழ்ச்சியே மனமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியானது!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, இன்று புகழ்பெற்ற உயர்கல்விநிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினேன்.

மிகவும் பின்தங்கிய - துன்பங்களை அனுபவித்த குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ்பெற்றிருக்கும் அவர்களது கல்விப் பயணத்தையும் - கல்வி மீதான அவர்களது பற்றையும் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினேன்.

கல்விதான் உண்மையான பெருமையைத் தேடித் தரும் என உயர்படிப்புகளுக்குச் சென்றுள்ள இவர்கள் வாழ்வின் அத்தனை உயரங்களையும் காண வேண்டும் என உள்ளன்போடு வாழ்த்துகிறேன்! இப்படி கல்வியால் - உழைப்பால் முன்னேறிச் சாதனை படைப்பவர்களைத்தான் தமிழ்ச்சமூகம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்!

## முதல்வர் வழங்கினார்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்து கட்டணங்களையும் தமிழ்நாடு அரசே வழங்கி வருகிறது.

**மாணவர்களுக்கு அரசு செய்யும் உதவிகள்!**

மேலும், 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் ஆன்–லைன் வாயிலாகவும், நேரடியாகவும் (Online / Offline) நடத்தப்படுவதோடு, நுழைவுத் தேர்வுக்கு தயார் செய்தல், நுழைவுத் தேர்வு மையத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லுதல், நுழைவுத் தேர்வுகளின் இறுதி முடிவுகள் வெளியான பின்னர் வெற்றி பெற்ற மாணவர்களை கலந்தாய்வில் (Counselling ) பங்கேற்பதற்கு தயார் செய்தல், கல்லூரிகளில் பிடெக்., பி.இ., போன்ற பாடப் பிரிவுகளை தேர்ந்தெடுப்பதற்கு உளவியல் ரீதியாக மாணவர்களை தயார் செய்து, விருப்பமான துறையை தேர்ந்தெடுக்கவும் அரசு உதவுகிறது.

அத்துடன் புதிய முயற்சியாக CLAT மற்றும் CUET நுழைவுத் தேர்வுக்கு தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களைக் கொண்டே பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்குப் பின்னரும் அக்கல்வி நிறுவனங்களின் தன்னார்வ வழிகாட்டுநர் (Mentorship) மூலமாக அரசு மாணவர்களை வழிநடத்தி வருகிறது.

2024–25ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயின்ற 16 மாணவர்கள் JEE, NIFT–EE, CUET, CLAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, முன்னணி உயர்கல்வி நிறுவனங்களான IIT, NIT, NIFT, FDDI (Foot wear Design and Development Institute) போன்ற நிறுவனங்களில் சேர்ந்து சிறந்த முறையில் பயின்று வருகின்றனர்.

**ஆதிதிராவிடர் - பழங்குடியினர் மாணவர்களை வாழ்த்திய முதல்வர்!**

தமிழ்நாடு அரசின் தொடர் முன்னெடுப்பின் காரணமாக 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத்தேர்வுகளில் தேர்வு பெற்று, புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளைச் சார்ந்த 136 மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினிகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## சென்னை பறக்கும் ரயில் நிறுவனம் (MRTS)

# சென்னை மெட்ரோவுடன் இணைப்பு எப்போது?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

சென்னை பறக்கும் ரயில் நிறுவனத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கையகப்படுத்துவது குறித்த கேள்விகளை திமுக துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் எழுப்பினார்.



சென்னை மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் (MRTS) எனப்படும் சென்னை பறக்கும் ரயில் திட்டத்தின் செயல்பாடு மற்றும் நிர்வாகத்தை இந்திய ரயில்வேயிடமிருந்து, சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) க்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS இன் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பை CMRL க்கு முழுமையாக மாற்றுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

இந்த மாற்றத்தை சுமுகமாக செயல்படுத்துவதற்காக நிதி, செயல்பாடு மற்றும் சட்ட ரீதியான விவகாரங்களை அரசு பரிசீலித்து வருகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS நெட்வொர்க்கை CMRLக்கு முழுமையாக மாற்றுவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன? இந்த ஒருங்கிணைப்பின் மூலம் ரயில் பயணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?” என்ற கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியிருந்தார்.

---

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஆக. 1 -

முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர



செயற்குழுக் கூட்டம் இன்று (1.8.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருப்பத்தூர் எஸ்.ஆர்.கே. கன்வென்சன் ஹாலில் திருப்பத்தூர் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், OTN தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :**

1.முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்.

2 ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை.

3.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

தென்காசி நகரில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் சட்டப் பேரவையின் 2024 – 2026 ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழுத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், சட்ட மன்ற உறுதிமொழி குழு உறுப்பினர்கள் இரா.அருள் (சேலம் மேற்கு) கோ.தளபதி (மதுரை வடக்கு) அ.நல்லதம்பி (திருப்பத்தூர்) சா.மாங்குடி (காரைக்குடி) கே.மோகன் (அண்ணா நகர்) எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை) ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

## ஆகஸ்ட் 1 (2000)



**பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.**

**கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் ‘நாவுக்கரசர்’ என அழைக்கப்பட்டவர்.**

**கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.**

**“என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**